International Journal of Applied Research 2019; 5(4): 103-138




**ISSN Print:** 2394-7500
**ISSN Online:** 2394-5869
**Impact Factor:** 5.2
IJAR 2019; 5(4): 103-108
www.allresearchjournal.com
Received: 25-02-2019
Accepted: 29-03-2019

**கு. பத்மநாபன்**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் மொழி மற்றும்
மொழிபெயர்ப்பியல்து
றை, திராவிடப்
பல்கலைக்கழகம்,
சீனிவாச வனம், குப்பம்

**Correspondence**
**கு. பத்மநாபன்**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் மொழி மற்றும்
மொழிபெயர்ப்பியல்து
றை, திராவிடப்
பல்கலைக்கழகம்,
சீனிவாச வனம், குப்பம்

# ஜெயகாந்தன் யு. ஆர் அனந்தமூர்த்தி நாவல்களில் பொருட்கூறுகள்

**கு. பத்மநாபன்**

**முன்னுரை**

தமிழில்தோன்றி நவீன இலக்கியம் படைத்த எழுத்தாளர்களுள் ஜெயகாந்தன் என்பவரும் ஒருவராவார். இலக்கியத்திற்கு இந்திய அளவில் வழங்கப்பெறும் உயரிய விரிதுகளுள் ஒன்றாகிய ஞானபீடப் பரிசினை தமிழ் மொழிக்கு பெற்றுத்தந்த இரண்டாவது எழுத்தாளர் இவர். கன்னட மொழியில் ஞானபீடப் பரிசு பெற்ற எழுத்தாளர்களுள் யு. ஆர். அனந்தமூர்த்தி ஒருவராவார்இருவர்தம் நாவல்களிலும் இடம்பெற்றிருக்கும் பொருட்கூறுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்துவது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். முதலில் இருவர்தம் நாவல்களிலும் பொதுவாக இடம்பெற்றிருக்கும் பொருட்கூறுகள் கண்டறிந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன.ஜெயகாந்தன் மற்றும் யூ. ஆர் அனந்தமூர்த்தி நாவல்களில் ஒருவர் தம் ஆக்கங்களில் மட்டும் சிறப்பாக இடம்பெற்றிருக்கும் பொருட்கூறுகள் கட்டுரையின் பிற்பகுதியில் முறையே கண்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

அடிக் கருத்து ஒன்றில் தவிர்க்கயியலாதவாறு இடம்பெற்றிருக்கும் கருத்துகள் பொருட்கூறு என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. பொருட் கூறு நீக்கப்படுமாயின் அடிக்கருத்து முழுமையடையாமல் சிதைவடையலாம். அந்த அளவிற்கு அடிக்கருத்து ஒன்றில் தவிர்க்கயியலாத வண்ணம் இடம்பெற்றிருக்கும் பொருளே பொருட் கூறு என்ற வரையறைக்கு உரியதாகும். இந்த பொருட்கூறு ஆங்கில மொழியில் மோட்டிஃப் என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது.

பொருட்கூறு குறித்து விரிவாகவும் தெளிவாகவும் அறிந்துகொள்வதற்கு நாவல் அகராதி துணை புரிகிறது.

> "ஓர் இலக்கிய ஆக்கத்தில், இசையில், நாட்டார் வழக்காற்றில் ஒரு கர்ருத்தையோ கருத்தின் பகுதியையோ தொகுத்துத் தரக் கூடிய, அடிப்படையில் மீண்டும் மீண்டும் இடம்பெறக் கூடிய,

எளிதில் புலப்படக்கூடிய எண்ணம், படிமம், வகைமாதிரி, நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை பொருட்கூறு ஆகும்."

என்று பொருட்கூறு என்பதற்கு நாவல் அகராதி விளக்கம் தருகிறது. மேலும் கி. மு. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய இலியட் என்ற காப்பியம் முதல் கி. பி. இருபதாம்நூற்றாண்டில் தோன்றிய யுலிசஸ் என்ற நாவல் வரை பல்வேறு இலக்கியங்களிலும் நிலைபேருடைமை குறித்த வினா என்பது ஒரு பொருட்கூறாகத் தொடர்ந்து இடம்பெற்று வந்திருப்பதை இந்த அகராதி எடுத்துக்காட்டுகிறது. தூங்கிக்கொண்டிருக்கும் அழகை எழுப்பும் முத்தம் என்பதுநாட்டார் வழக்காற்றியலில் ஒரு பொருட்கூறாகும். ஜேம்ஸ்ஜாய்சுடைய தலைமை மாந்தராகிய ஸ்டீஃபன் டெட்னஸ் என்பவரின் சுதந்திர உணர்வை குறிப்புணர்த்தும் காரணத்தினால் கலைஞனை இளைஞனாக சித்திரித்தல், பறவைகள் பறத்தல் முதலிய நிகழ்ச்சிகள் அவருடைய இலக்கிய ஆக்கங்களைப் பொருத்தமட்டிலும் பொருட்கூறுகளாகக் கருதப்படத் தக்கவையே ஆகும்."

நாவல் அகராதி. ப.
இவ்வாறு பொருட் கூறுகள் குறித்து நாவல் அகராதி விளக்கம் தருகிறது.

பொருட்கூறு தமிழ்க் கல்விச் சூழலில் குறிப்புப்பொருள் என்ற பிரிதொரு சொல்லால் கா. பஞ்சாங்கம் என்பவரின் இலக்கியக் கொள்கையும் திறனாய்வும் என்ற நூலில் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த பொருட்கூறு நாவலின் கட்டமைப்பில் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெற்றிருக்கிறது என்ற உண்மை மா. திருமலை என்பவரால் எழுதப்பட்ட புனைகதை இலக்கியப் போக்குகள் என்ற நூலில் காணப்படுகிறது.

### பொருளும், பொருட்கூறும்

கருத்து ஒன்று தொடக்க நிலையில் பொருள் என்றநிலையில் அமைந்திருக்கிறது. அந்த பொருள் வளர்ச்சியும் உறுதியும்பெற்று இணையான மற்ற பொருட்கூறுகளுடன் இணைந்து அடிக்கருத்தின் தோற்றத்திற்கு காரணமாய் அமைந்திருக்கிறது.எனவே பொருட்கூறு என்பதை வளர்ச்சியும் உறுதியும் பெற்ற பொருள் என்று துணியலாம்.

இது மட்டுமன்று, இலக்கிய ஆசிரியர்கள் ஓர் அடிக் கருத்தை தம் இலக்கிய ஆக்கங்களில் விளக்க முயலும் போது இந்த பொருட்கூறுகள் அவர்களும் அறியாவண்ணம் அவர்கள் தம் ஆக்கங்களில் தொடர்ந்து இடம்பெற்றுஅவர்கள் தம் இலக்கிய முயற்சிகளுக்கு மறைமுகமாய் உதவுகின்றன.அந்தவகையில் சில பொருட்கூறுகள் ஜெயகாந்தன், யூ. ஆர். அனந்தமூர்த்தி ஆகிய இரு ஆசிரியர்களின் நாவல்களிலும் இடம்பெற்றிருப்பதை சான்றுகளுடன் நிறுவயியலும்.

குடும்பத்திலிருந்து வெளியேறுதல், திருமணத்தை தவிர்த்தல்,மரபுக்கு மாறான பாலுறவுத் தொடர்புகொண்டிருத்தல் இதழ்களால் பாதிப்படைதல் ஆகியவற்றை ஜெயகாந்தன் யூ. ஆர். அனந்தமூர்த்தி ஆகியஇருவர்தம் நாவல்களிலும் காணமுடிகிறது.

பிள்ளைகளுக்கு மதுபுகட்டுதல், கருநாடகப் பகுதிகளுக்குத் தப்பிச்செல்லுதல், மனைவியரைச் சார்ந்திருத்தல்,எழுத்தாளரைச் சந்தித்தல், நூலகத்தில் ஐயங்கார் சமூகப் பின்னணி கொண்ட பிராமணர்கள் பணியாற்றுதல் ஆகியவற்றை ஜெயகாந்தன் நாவல்களில் இடம்பெற்றிருக்கும் பொருட்கூறுகள் என்று அடையாளப்படுத்தலாம்.அவ்வாறே சீர்திருத்த பிராமணர் என்ற பொருட்கூறை யூ. ஆர். அனந்தமூர்த்தி நாவல்களில் மட்டும் இடம்பெறும் பொருட்கூறு என்று உறுதியாய்த் துணியலாம்.

### குடும்பத்திலிருந்து வெளியேறுதல்

ஜெயகாந்தன் யூ. ஆர். அனந்தமூர்த்தி ஆகிய இருவர் தம் நாவல்களிலும் இடம்பெற்றிருக்கும் முதன்மையான

மாந்தர்கள் குடும்பத்திலிருந்து வெளியேறுதல் என்பதை தம் முதன்மையான முடிவாக மேற்கொள்வதை அறிய முடிகிறது.ஜெயகாந்தனின் சாரங்கன், கங்கா, சீதா, ஆத்மராமன் ஆகிய முதன்மையான மாந்தர்களும், சபாபதிப்பிள்ளை அகிலா,ராஜராஜேஸ்வரி,மாருதி ஆகிய துணைமாந்தர்களும் தத்தம் குடும்பங்களிலிருந்து வெளியேறி தனித்து வாழ்வதாகவோ, அல்லது மற்றவர்களின் குடும்பங்களில் இணைந்துகொண்டு வாழ்வதாகவோ ஜெயகாந்தனால் கூறப்பட்டுள்ளது. பாரிசுக்குப் போ கங்கை எங்கே போகிறாள், சுந்தரகாண்டம், காற்றுவெளியினிலே ஆகிய நாவல்களில் கதைமாந்தர்கள் தம் குடும்பங்களிலிருந்து வெளியேறுதல் என்ற நிகழ்ச்சி ஒரு முதன்மையான நிகழ்ச்சியாக விளக்கப்பட்டுள்ளது. எனவே குடும்பத்திலிருந்துவெளியேறுதல் என்பதை ஜெயகாந்தனின் பொருட்கூறாகத் துணியலாம்.

பிராணேசாச்சாரியார், சந்திரி, கிருஷ்ணப்ப கௌடா, தினகர் ஆகிய முதன்மையான கதை மாந்தர்களும் குடும்பத்திலிருந்து வெளியேறுதல் என்ற முடிவைத் தம் வாழ்வில் மேற்கொள்வதாக யூ. ஆர். அனந்தமூர்த்தி நாவல்களில் கூறப்பட்டுள்ளது. சம்ஸ்காரா, அவஸ்தை, பிறப்பு ஆகிய நாவல்களில் இந்தப் பொருட்கூறு இடம்பெற்றிருப்பதை அறியமுடிகிறது. எனவே இந்த பொருட்கூறு யூ. ஆர். அனந்தமூர்த்தி நாவல்களிலும் இடம்பெற்றிருப்பது உறுதிப்படுகிறது.

### திருமணத்தைத் தவிர்த்தல்,

சாரங்கன், கங்கா, ஹென்றி, ஆத்மராமன், கல்யாணி, ஆகிய ஜெயகாந்தனின் முதன்மையான கதைமாந்தர்கள் திருமணம்என்ற சமூகச் சொல்லாடலைத் தவிர்த்து விடுவதாக ஜெயகாந்தனால் கூறப்பட்டுள்ளது. பாரிசுக்குப் போ, சில நேரங்களில் சில மனிதர்கள்,ஒரு மனிதன் ஒரு வீடு ஒருஉலகம், காற்றுவெளியினிலே ஆகிய நாவல்கள் திருமணத்தை தவிர்த்தல் என்ற முடிவை கதைமாந்தர்கள் மேற்கொள்வதாக விளக்குகின்றன.

மார்கரெட், கௌரி தேஷ்பாண்டே ஆகிய கதைமாந்தர்கள் திருமணம் என்ற சமூகச் சொல்லாடலைத் தவிர்த்துவிடுவதாக பாரதிபுரம், அவஸ்தை ஆகிய நாவல்களில் யூ. ஆர். அனந்தமூர்த்தியால் கூறப்பட்டுள்ளது.

### மரபுக்கு மாறான பாலுறவுத் தொடர்பு

சாரங்கன், லலிதா, ஆகிய கதை மாந்தர்கள் மரபுக்கு மாறான பாலுறவுத்தொடர்பு கொண்டிருப்பதாக ஜெயகாந்தனால் பாரிசுக்குப் போ நாவலில் கூறப்பட்டுள்ளது.

ஜகன்னாதன், மார்கரெட்,கிருஷ்ணப்ப கௌடா, கௌரிதேஷ் பாண்டே, தினகர், நாரயணதந்திரி,கங்குபாய்,மஞ்சையா முதலியோர் மரபுக்கு மாறான ப்பாலுறவுத் தொடர்பு கொண்டிருப்பதாக யூ. ஆர். அனந்தமூர்த்தியின் நாவல்களில் கூறப்பட்டுள்ளது. பாரதிபுரம், அவஸ்தை, பிறப்பு, திவ்யா ஆகிய நாவல்கள் இந்தநிகழ்வை விரிவாக விளக்குகின்றன. சமூகத்தால் ஏற்கப்படாத உரவே இந்த கதை மாந்தர்களால் பாலியல் நிலையில் மேற்கொள்ளப்படுகிறது. எனவே இது மரபுக்கு மாறான பாலுறவுத்தொடர்பு என்று இங்கு குறிக்கப்படுகிறது.

### இதழ்களால் பாதிப்படைதல்

ஓர் இதழில் வெளிவந்துள்ள சிறுகதையாலும் கட்டுரையாலும் கதை மாந்தர்கள் பாதிப்புக்கு உள்ளாவதாக ஜெயகாந்தன், யூ. ஆர். அனந்தமூர்த்தி ஆகிய இருவர்தம் நாவல்களிலுமே கூறப்பட்டுள்ளது.

வார இதழ் ஒன்றில் வெளிவந்துள்ள அக்கினிப் பிரவேசம் என்ற சிறுகதையை படித்து கங்கா அதனால் பாதிப்படைவதாக சிலநேரங்களில் சில மனிதர்கள் நாவலில் எழுதப்பட்டுள்ளது. லட்சாதிபதி என்ற சிறுகதையை வாசித்து கங்காவும் வசந்தாவும் பாதிப்படைவதாக

கங்கை எங்கே போகிறாள் நாவலில் சித்திரிக்கப்பட்டுள்ளது ஹே சீதே என்ற சிறுகதையை வாசித்து சீதா, மாரியம்மாள் ஆகிய முதன்மையான கதை மாந்தர்கள் பாதிப்படைவதாக சுந்தரகாண்டம் நாவலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய ஆலய நுழைவுப் போராட்டம் குறித்து செய்தி இதழ்களில் இடம்பெற்றிருக்கும் விமரிசனக் கட்டுரைகளை வாசித்து ஜகன்னாதன் வேறுபட்ட பல உணர்ச்சிகளுக்கு உட்படுவதாக பாரதிபுரம் நாவலில் விளக்கப்பட்டுள்ளது. தன்னை மிகவும் ஈர்த்த பைராகி ஒருவர் பற்றி பல ஆண்டுகள் கழித்து ஆங்கில வார இதழில் வாசிக்க நேரிட்ட கிருஷ்ணப்ப கௌடா அதனால் மிகவும் பாதிக்கப்பெறுவதாக அவஸ்த்தைநாவலில் கூறப்பட்டுள்ளது.தினகரை தொலைக்காட்சியில் பார்த்து நாராயணதந்திரியின் குடும்பம் மிகவும் மகிழ்வெய்துவதாக பிறப்பு நாவலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.இவற்றை எல்லாம் நோக்கும் போது இதழ்கள் உள்ளிட்ட ஊடகங்களால் பாதிப்படைதல் என்பதை ஜெயகாந்தன் மற்றும் யூ. ஆர். அனந்தமூர்த்தி ஆகியஇரு ஆசிரியர்களும் தம் நாவல்களில் ஒரு பொருட்கூறாக அமைத்துக்கொண்டிருக்கும் உண்மை புலனாகிறது.

## பிள்ளைகளுக்கு மது புகட்டுதல்

பிரபாகர் தம் மகனாகிய சுபாஷிற்கு வேடிக்கையாகச் சிறிது மதுவை புகட்டியச் செயல் பத்மாவால் வெகுவாகக் கண்டிக்கப்பெருவதை சிலநேரங்களில் சில மனிதர்கள் என்ற நாவல் பதிவு செய்கிறது. சபாபதிப் பிள்ளை தம் வளர்ப்பு மகனாகிய ஹென்றியைத் தம்முடன் இணைந்து மது அருந்துமாறு கேட்டுக்கொள்வதாக ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் நாவல் எடுத்துக்காட்டுகிறது. அவ்வாறே சுந்தரசர்மா தம் மகளாகிய சீதாவிற்கு தம் இல்லத்திலேயே சிறிது மதுவை புகட்டுவதாக சுந்தரகாண்டம் நாவல் மூலம் அறியமுடிகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கதைமாந்தர்களும் சுதந்திர உணர்வு என்ற இயல்பை மிகுதியாகக் கொண்டிருக்கும் கதைமாந்தர்களாவர். பிள்ளைகளுக்கு மது புகட்டுதல் என்ற செயல் மூலம் அந்த சுதந்திர உணர்வும் நவீன நோக்கும் ஆசிரியரால் புலப்படுத்தப்படுவதால் பிள்ளைகளுக்கு மது புகட்டுதல் என்பது ஜெயகாந்தன் நாவல்களில் மட்டும் இடம்பெற்றிருக்கும் பொருட்கூறு எனலாம்.

## கருநாடகப் பகுதிக்குத் தப்பிச் செல்லுதல்

குடும்ப நெருக்கடியிலுந்து தப்பித்துக்கொள்வதற்காக பிரபாகர் மகிழ்வுந்தில்ஏறி கர்நாடகப் பகுதிக்குச் செல்வதாக கங்கை எங்கே போகிறாள் நாவலில் கூறப்பட்டுள்ளது.மனைவியின்செயல்பாட்டி னால் மன வெறுப்பிற்கு உள்ளான சபாபதிப்பிள்ளை தம் வீட்டைப் பூட்டிவிட்டு ஊரிலிருந்து வெளியேறுவதாகஒரு மனிதன் ஒரு வீடு ஒருஉலகம் நாவல் சித்திரிக்கிறது.மேலும் அவர், ராணுவத்தில்வெகுகாலம் பணியாற்றிவிட்டு கருநாடகப் பகுதியில் குடியேறுவதாக அந்த நாவலில் குறிப்பு காணப்படுகிறது.சுந்தரகாண்டம் நாவலில் தம் குடும்ப நெருக்கடி, பணி நெருக்கடி இவற்றிலிருந்து விடுபட்டு சிறிது ஓய்வுகொள்ள நினைத்த சுகுமாறனும் தம் மனைவியாகிய சீதாவை ழைத்துக்கொண்டு மகிழ்வுந்தில் கருநாடகத்திற்குள் செல்வதாக ஜெயகாந்தனால் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் கருநாடகப்பகுதிக்குத் தப்பிச் செல்லுதல் என்பது அவர்தம் நாவல்களில் மட்டும் இடம்பெற்றிருக்கும் ஒரு பொருட்கூறாகும் என்பது புலனாகிறது.

## மனைவியைச் சார்ந்திருத்தல்

பாரிசுக்குப் போ நாவலில் இடம்பெற்றிருக்கும் மகாலிங்கம்எந்த நிலையிலும் தம் மனைவியாகிய லலிதாவிற்கு மணவிலக்கு வழங்கஇயலாது என்று உறுதியாகவே கூறிவிடுகிறார். அது மட்டுமன்று மனைவியாகிய லலிதா தம்மிடம் மணவிலக்கு கோரிக்கையை மட்டும்முன்வைக்கவேண்டாம்

என்று அவரிடம் வேண்டி கண்ணீர் உருக்கிறார். அவ்வாறே சுந்தரகாண்டம் நாவலில் இடம்பெற்றிருக்கும் சுகுமாறனும் தம் மனைவியாகிய சீதாவை பிரிய இயலாமலும் அவருக்கு மணவிலக்கு வழங்க மனம் இல்லாமலும் வருந்தியவராய் அவர் தம் அன்பை நாடி நிற்கிறார். இந்த இருநாவல்களிலும் கணவர்கள் தம் மனைவியரை மிகையாகச் சார்ந்திருக்கும் ஆளுமைகளாக நாவலாசிரியரால் படைக்கப்பட்டுள்ரார்கள். பெண்களின் ஆளுமையை உயர்த்திக்காட்ட இந்த பொருட்கூறினை நாவலாசிரியராகிய ஜெயகாந்தன் பயன்படுத்திக்கொண்டிருப்பது நாவலை முழுமையாக ஆராயும்போது புலனாகிறது.இவற்றின் மூலம் மனைவியரைச் சார்ந்திருத்தல் என்பது ஜெயகாந்தன் நாவல்களில் மட்டும் இடம்பெற்றிருக்கும் பொருட்கூறுகளுள் ஒன்று ஆகும் எனலாம்.

### எழுத்தாளரைச் சந்தித்தல்

ஆர்.கே. வி என்ற எழுத்தாளரை சந்திப்பதன் மூலம் கங்கா,பிரபாகர்,வசந்தா ஆகியோர் வாழ்வில் பல நல்ல மாற்றங்கள் நிகழ்வதாக சிலநேரங்களில் சில மனிதர்கள், கங்கைஎங்கே போகிறாள் ஆகிய நாவல்களில் கூறப்பட்டுள்ளது.அவ்வாறே, சுந்தரகாண்டம் நாவலில் ராமதாஸ் என்ற எழுத்தாளரைச் சந்தித்ததன்மூலம் பல நல்ல மாற்றங்கள் சீதா, சுகுமாறன் ஆகியோர் வாழ்வில் ஏற்படுவதாக ஆசிரியரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.எனவே எழுத்தாளரைச் சந்தித்தல் என்பது ஜெயகாந்தன் நாவல்களில் மட்டும் இடம்பெற்றிருக்கும் ஒரு பொருட்கூறாகும்.

### நூலகத்தில் ஐயங்கார் சமூகப் பின்னணிகொண்ட பிராமணர் பணியாற்றுதல்

எழுத்தாளராகிய ஆர், கே. வி தாம் பணியாற்றிக்கொண்டிருந்த கல்லூரியிலிருந்து பணி நீக்கம் செய்யப்படுகிறார். இதை அறியாத கங்கா அவர் அலுவலராகப் பணியாற்றிக்கொண்டிருந்த தம் கல்லூரி நூலகத்திற்கு செல்கிறார்.அங்கு பணியிலிருந்தமற்றொரு அலுவலர் ஆர். கே.வி பணிநீக்கம் செய்யப்பட்ட செய்தியை கங்காவிடம் சொல்கிறார். இந்த அலுவலர் பிராமணச் சமூகப் பின்னணி கொண்டவராவார் என்பதும்,அதிலும் அவர் சார்ந்திருக்கும் சமூகம் என்பது பிராமண சமூகத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றாகிய ஐயங்கார் சமூகமாகும் என்பதும் சிலநேரங்களில் சிலமனிதர்கள் என்ற நாவல் மூலம் அறியப்படுகிறது. நாவலாசிரியர் தம் விளக்கங்கள் மூலமாகவே இத்தகைய உண்மை பெறப்படுகிறது.இந்த ஐயங்கார் சமூகப் பின்னணிகொண்ட பிராமணர் ஒருவர் நூலகத்தில் பணியாற்றுதல் என்ற பொருட்கூறு ஜெயகாந்தன் இயற்றிய சுந்தரகாண்டம் என்ற நாவலிலும் இடம்பெற்றிருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழக நூலகத்திலிருந்த சீதாவிற்கு சுந்தரசர்மாவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்திருக்கும் செய்தி அந்த நூலகத்தில் பணியாற்றும் அலுவலர் ஒருவரால் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு அந்தச் செய்தியை சீதாவிற்குத் தெரிவிக்கும் அலுவலரும்ஒரு பிராமணர் ஆவார். அவரும் ஐயங்கார் சமூகப் பின்னணிகொண்டவராகவேசுந்தரகாண்டம் நாவலில் கூறப்பட்டுள்ளது.இவ்வாறு இஜெயகாந்தன் நாவல்களில் மட்டுமே ஐயங்கார் சமூகப்பின்னணி கொண்ட பிராமணர் என்ற பொருட்கூறு பற்றி அறியமுடிகிறது.

### சீர் திருத்த பிராமணர்

சூழலோடு பொருந்தாதவாறு இடம்பெற்றிருக்கும் நடைமுறைகளையும், சடங்குகளையும் சீர்திருத்தி சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்காக கதை மாந்தர் ஒருவர் தொடர்ந்து முயன்றுகொண்டிருப்பதை யூ. ஆர். அனந்தமூர்த்தியின் எல்லா நாவல்களிலும் காணமுடிகிறது. எனவே இதை ஒரு பொருட்கூறு எனலாம். சம்ஸ்காரா, பாரதிபுரம், திவ்யா ஆகிய நாவல்களில் இந்த பொருட்கூறின் பயன்பாடு மிகச் சிறப்பாக

இடம்பெற்றிருக்கும் உண்மை சான்றுகளால் உறுதிப்படுகிறது.

மஞ்சையா என்ற பெயருடைய பிராமணர் தூர்வாசபுர அக்கிரகாரத்தில் வைக்கப்பெற்றிருக்கும் நாரணப்பாவின் சடலத்திற்கு முதன்மையாகச் செய்யப்படவேண்டிய இறுதிச்சடங்கு நிகழ்ச்சியை செய்ய முன்வருவதாக சம்ஸ்காரா நாவலில் கூறப்பட்டுள்ளது.எவரும் முன்வராத நிலையில் நாரணப்பாவின் சடலத்திற்கு இறுதிச்சடங்குசெய்ய அவர் முன்வருவது அவர்தம் பரந்தமனப்பான்மையை எடுத்துக்காட்டுகிறது. மேலும் தாவண்கெரெ என்ற நகரத்திற்குச் சென்று அங்கிருக்கும் நவீன மருத்துவரை அழைத்துக்கொண்டுவந்து பிளேக்நோயைத் தடுக்கக்கூடிய ஊசியை தம்முடைய பாரிஜாதபுர மக்கள் அனைவருக்கும் போட்டுவிடவேண்டும்என்று மஞ்சையா எண்ணுவது அவர்தம் சீர்திருத்த எண்ணத்தை மெய்ப்பிப்பதாய் அமைந்துள்ளது. சம்ஸ்காரா நாவலில் இவ்வாறு சீர்திருத்த பிராமணர் என்ற பொருட்கூறு அமைந்திருக்க யு. ஆர். அனந்தமூர்த்தியின் இரண்டாவது நாவலாகிய பாரதிபுரம் என்பதும் இத்தகைய சீர்திருத்த பிராமணர் என்ற பொருட்கூறைக் கொண்டு திகழ்வது அறியப்படுகிறது.

பாரதிபுரம் நாவலில் இடம்பெற்றிருக்கும் ஜகன்னாதனுடைய தந்தையார்தம் ஊருக்கு வருகை புரிந்த காந்தியடிகளுடன் இணைந்து தலித் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பகுதிக்குச் செல்ல நேரிட்டது. அவர்களுடன் மற்ற பிராமணர்களும்செல்கிறார்கள். பிறகு பஞ்ச கவ்யம் என்று அறியப்பெறும்திரவத்தால் தம் மீது கவிந்ததாக நம்பப்பெறும் தீட்டினைப் போக்கிக்கொள்வதற்குறிய சடங்கினைச் செய்துகொள்கிறார்கள். ஆனால் ஜகன்னாதனின் தந்தையார் மட்டும் அதனைத் தவிர்த்துவிடுவதாக நாவலாசிரியரால் கூறப்பட்டுள்ளது. சம்ஸ்காரா நாவலில் இடம்பெற்றிருக்கும் மஞ்சையா என்ற பெயரும் பாரதிபுரம் நாவலில் விளக்கப்பட்டுள்ள காந்தியடிகளுடன் தலித் மக்கள் வாழ்விடத்திற்கு பிராமணர் ஒருவர் சென்ற செயலும் யூ. ஆர். அனந்தமூர்த்தியின் ஐந்தாவது நாவலாகிய திவ்யா என்பதில் மீண்டும் இடம்பெற்றுள்ளன.

இவற்றை எல்லாம் தொகுத்து நோக்கும்போதுசீர்த்திருத்த பிராமணர் என்ற பொருட்கூறு யூ. ஆர். அனந்தமூர்த்தி நாவல்களில் மட்டும் இடம்பெற்றிருக்கும் பொருட்கூறு ஆகும் என்பது புலனாகிறது.

**முடிவுரை**

இந்த ஆய்வுக் கட்டுரையில் கண்டடைந்த முடிவுகளை பின்வருமாறு தொகுத்துக்கொள்ளலாம்.

குடும்பத்திலிருந்து வெளியேறுதல், திருமணத்தை தவிர்த்தல்,மரபுக்கு மாறான பாலுரவுத் தொடர்புகொண்டிருத்தல், இதழ்களால் பாதிப்படைதல் ஆகியவை ஜெயகாந்தன் யூ. ஆர். அனந்தமூர்த்தி ஆகிய இருவருடைய நாவல்களிலும் காணப்படும் பொருள்கூறுகளாகும்.

பிள்ளைகளுக்கு மதுபுகட்டுதல், கருநாடகப் பகுதிகளுக்குத் தப்பிச்செல்லுதல், மனைவியரைச் சார்ந்திருத்தல்,எழுத்தாளரைச் சந்தித்தல், நூலகத்தில் ஐயங்கார் சமூகப் பின்னணி கொண்ட பிராமணர்கள் பணியாற்றுதல் ஆகியவை ஜெயகாந்தன் நாவல்களில் மட்டும் இடம்பெற்றிருக்கும் பொருட்கூறுகள்ஆகும்.

சீர்திருத்த பிராமணர் என்பது யூ. ஆர். அனந்தமூர்த்தி நாவல்களில் மட்டும் காணப்படும்பொருள்கூறாகும்.